தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

தேதி: 01.12.2022

அன்புள்ள ஐயா அவர்களுக்கு,

வணக்கம்.

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இளமறிவியல் பட்டப்படிப்புகளுக்கான கலந்தாய்வு **26.11.2022** முதல் **7.5%** இட ஒதுக்கீட்டிற்கு (மாநில அரசுப்பள்ளியில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை படித்த மாணவர்கள்) நடைபெற்றது. இந்த ஒதுக்கீட்டிற்கு நாளை (02.12.2022) சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் தற்காலிக சேர்க்கை ஆணை வழங்கப்படவுள்ளது.

இது குறித்தான, பத்திரிக்கையாளர் சந்திப்பானது பல்கலைக்கழக அண்ணா அரங்கில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி அவர்கள் தலைமையில் **02.12.2022 நாளை (வெள்ளிக்கிழமை) நண்பகல் 12.00 மணியளவில்** நடைபெறவுள்ளது.

எனவே, தங்களுடைய மேலான **நிருபர் மற்றும் புகைப்பட / காணொலி நிருபர்** இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, தங்களுடைய மேலான நாளிதழ் / தொலைக்காட்சி / பத்திரிக்கையில் செய்தியினை வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற தங்களுடைய மேலான ஒத்துழைப்பை நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி !

தங்கள் உண்மையுள்ள,

மக்கள் தொடர்பு அலுவலர்

பெறுநர்,
ஆசிரியர் / நிருபர் / புகைப்பட நிருபர் / காணொலி நிருபர்